எம்.சி.ஓ.பி எண்: 3704/2024 தேதி: 23.07.2026

மசா. : 2

பெயர் : ராகவன்

த/பெ. : தேவராஜ்

வயது : 45

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

<u>**முதல் விசாரணை**</u>

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 14,15 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இந்த விபத்தில் இறந்து போன நபரின் பெயர் சதீஸ்குமார். அவரை எனக்கு யார் என்று தெரியாது. சதீஸ் குமார் சாலையை கடக்கும்போது பேருந்து அவர் மீது இடித்துவிட்டது. நான் கால் டேக்ஸி ஓட்டிக்கொண்டு வந்தேன். கால் டேக்ஸி ஓட்டுநராக வேலை செய்கிறேன். நான் பஸ் வந்த திசைக்கு எதிர் திசையில் வந்தேன். விபத்து நடக்கும்போது காலை 5.45 மணி இருக்கும். விபத்து நடக்கும்போது விபத்தை பார்த்தேன். சதீஸ்குமார் பஸ் வருவதை கவனிக்காமல் ஓடினார் என்றால் இல்லை. பஸ் வருவதை பார்த்து நின்றார். விபத்தில் அவருக்கு அடிப்பட்டது. போலீஸ்சார் என்னை விசாரிக்கவில்லை. ஆம்புலன்ஸ்க்கு நான் போன் செய்யவில்லை. மருத்துவமனைக்கு நான் செல்லவில்லை. 3–4 நாட்கள் கழித்து எனக்கு அந்த பக்கம் சென்றபோது சதீஸ்குமார் இறந்துவிட்டார் என்று தெரிந்துகொண்டேன். விபத்து நடந்த இடம் மாம்பாக்கம் மெயின் ரோட்டில் நடந்தது. நான் இறந்தவருக்கு சாதகமாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரருக்கு உதவும் நோக்கில் இழப்பீடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

X

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.